**செய்தி வெளியீடு எண் : 1873** **நாள் : 27.10.2022**

**செய்தி வெளியீடு**

**மாநில திட்டக்குழுவின் கொள்கை வரைவுகளின் மீதான ஆய்வுக் கூட்டம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுத் தலைவருமான திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (27.10.2022) தலைமைச் செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் கொள்கை வரைவுகளின் மீதான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மாநிலத் திட்டக் குழு புதிய கொள்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலுக்கிணங்க வடிவமைக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாநிலத் திட்டக் குழுவால் பல்வேறு துறைகளுக்குரிய பத்து கொள்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அவற்றில் பணி முடிவுற்ற நிலையில் உள்ள மூன்று கொள்கைகளான (1) ஆறு துறைகளை உள்ளடக்கிய தொழில் மயமாதல் கொள்கை – மின்வாகனம், தொழில்கள் 4.0, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், துணிநூல், கைத்தறி மற்றும் சுற்றுலா (2) தமிழ்நாடு சுகாதார நலக் கொள்கை (3) திருநர் + நலக்கொள்கைகள் ஆகியவை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இக்கொள்கைகளை செயல்படுத்துதல் மற்றும் முக்கிய முன்னெடுப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் திரு. ஜெ. ஜெயரஞ்சன், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர் இக்கொள்கைகள் குறித்து விளக்கினர். அதனைத் தொடர்ந்து, தொழில் மயமாதல் கொள்கை குறித்து, திருமதி மல்லிகா சீனிவாசன் அவர்களும், தமிழ்நாடு மருத்துவக் கொள்கை குறித்து மரு. அமலோற்பவநாதன் அவர்களும் மற்றும் திருநர் + நலக்கொள்கை குறித்து முனைவர் நர்த்தகி நட்ராஜ் அவர்களும் விவரித்தனர்.

இக்கூட்டத்தில், மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம. சீனுவாசன், பேராசிரியர் ம. விஜயபாஸ்கர், பேராசிரியர் சுல்தான் அஹ்மத் இஸ்மாயில், திரு. மு. தீனபந்து, இ.ஆ.ப., (ஓய்வு), சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, திருமதி மல்லிகா சீனிவாசன், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் கு. சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் திரு.த.சு. ராஜசேகர், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

...............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in